**அக்டோபர் - 24**

**"அவர்கள் யேசுவைக் கொண்டுபோகிறபோது... சீமோன் என்கிற ஒருவனைப் பிடித்து, சிலுவையை அவர் பின்னே சுமந்துகொண்டு வரும்படி அவன்மேல் வைத்தார்கள்."**

**-லூக் 23 : 26.**

போதகருடைய சுமையைப்பார்த்து, உதவி செய்யப்போகாமல் பேதுருவும், யோவானும், யாக்கோபும் எங்கே இருந்தார்கள் என்று நாம் அடிக்கடி கேட்டு ஆச்சரியப்படுகிறோம். சிலுவை சுமப்பதில் போதகர்களுக்கு உதவி செய்யும் சிலாக்கியத்தைப் பெற்ற சீமோன் மேல் பொறாமை கொள்ள மனதுள்ளவர்களாயிருந்தால், கர்த்தரின் சகோதரரில் அநேகர் ஒவ்வொரு நாளும் அடையாளமான சிலுவைகளை சுமந்து கொண்டு செல்லுகிறார்கள் என்பதையும், அவர்களுக்கு உதவி செய்வது நமக்குக் கிடைத்திருக்கிற சிலாக்கியம் என்றும் கர்த்தர் தம்மை உண்மையாய்ப் பின்பற்றுகிறவர்களுக்கு செய்கிற எந்த ஊழியத்தையும் தன்னுடைய சொந்த சரீரத்துக்கு செய்ததாக எண்ண ஒப்புக்கொள்கிறார் என்பதையும் சிந்தனை செய்வோமாக. அந்த மரசிலுவை கர்த்தரின் மிகப்பாரமான சுமையாய் இல்லாதிருந்தது போல, அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கும் உலகம் பார்க்காத சிலுவைகள் உண்டு. ஆனால் அவைகளை "சகோதரர்கள்" புரிந்து கொள்ள வேண்டும். "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்." **- Z '04, 155 (R 3369)**

யேசுவினுடைய பலவீனமாக்கப்பட்ட நிலைமையின் காரணமாக, சகிக்கக்கூடாதபடி சிலுவை யேசுவின் பலத்தை வருத்தியது. சீமோன் ஒரு இஷ்டப்படாத உதவியாளராக இருந்தாலும், தேவன் யேசுவுக்கு அப்பொழுது தேவையான உதவியைக் கொடுத்தார். யேசு உத்திரங்கள் சேருமிடத்தில் சிலுவையை சுமந்தார் என்று மூலவாக்கியம் குறிக்கிறது. இவ்விதமாக அதிக பாரமான அதன் பாகத்தை அவர் சுமந்தார். நிச்சயமாகவே யேசு நம்முடைய சிலுவையைவிட பாரமான ஒரு சிலுவையை சுமந்தார். நாம் நம்முடையதை சுமக்கும்போது யேசு அதன் அதிகபாரமான பாகத்தை சுமக்கிறதைக் காண்கிறோம். அவர் நம்முடைய பலவீனத்தை அறிகிறார். ஆகையால் நம்முடைய சுமையின் அதிகப் பாரமான பாகத்தை அவர் சுமந்து கொண்டு நமக்கு முன் செல்கிறார். இவ்விதமாக அவருடைய கிருபையினாலே மிகுந்த இடையூறுகளிலிருந்தும் கடைசி வரை மனவுறுதியோடு நிற்க நம்மை அவர் சாத்தியமாக்குகிறார். **- P '35, 131, 132.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**ஆதி 49:24,25; 50:20; 1சாமு 2:6-9; எஸ்றா 6:22; நெகே 6:16; எஸ்தர் 7:10; சங் 17:13;76:10; நீதி 16:7; 21:1.**

**கோபுர வாசிப்பு : Z '13, 120 (R 5221).**

**வினாக்கள் : இந்த வாரம் எனக்கு உயர் நிலையான கிருபைகளைக் கொண்டுவந்ததா? அவைகள் எவை? அதன் பலன் என்ன?**